Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No. 73/2022**

**2023-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ம் தேதி செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 10 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 10 | தொழில் | | மண்டல துணை பதிவுத்துறை தலைவர் |
| பெயர் | - | ராமசாமி | வட்டம் | - | திருச்சி |
| த/பெ | - | ராமலிங்கம் | சமயம் | - | |
| கிராமம் | - | திருச்சி | வயது | - | 58 |
| சாதி | - | - | | | |

**<u>26-12-2023</u>**

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.)**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது திருச்சி மண்டலத்தில் மண்டல பதிவுத்துறை தலைவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2020-ம் ஆண்டு திருப்பூர் மாவட்ட பதிவாளராக பணிபுரிந்தபோது திருப்பூர் மாவட்டத்தில் பதிவு எண் 1908/1990 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள RK பிளாண்டேசன் என்ற கூட்டுநிறுவனத்தின் பங்குதாரர்கள் தொடர்பாக வால்பாறை காவல் ஆய்வாளர் கொடுத்த கடிதத்தின் அடிப்படையில் 29.07.2020-தேதியிட்ட எனது கடிதத்தின்மூலம் மேற்படி கூட்டுநிறுவனத்தின் பங்குதாரர்களான 1) Z.K.EIPE , 2) K.A. IYPE மற்றும் MAYA PHILIP ஆகியோர்கள் பங்குதாரர்களாக உள்ள விவரத்தை தெரிவித்தேன். இது சம்பந்தமாக வால்பாறை காவல் ஆய்வாளர் என்னிடம் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

1.கூட்டாண்மை நிறுவனத்தின் பதிவுஎண் 1908/1990 -ன் பதிவு நகலை ஆய்வாளரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. அதன் விவரங்களை மட்டும் சொன்னேன். 1990-ற்கு பிறகு கூட்டாண்மை நிறுவனத்தின் பங்குதாரர்களுக்குள் மாற்றம் நடந்துள்ளது என்றால் பதிவேடுகளைப் பார்த்துதான் சொல்லமுடியும்.

2. என்னிடம் ஆய்வாளர் சம்பந்தப்பட்ட கூட்டாண்மை நிறுவனத்தின் பங்குதாரர் யார் என்று கேட்டபோது அது சம்பந்தப்பட்ட ஆவணத்தை பார்த்துதான் சொல்லியிருக்கவேண்டும் என்றால் ஆமாம். 1994,95 நாட்களில் கூட்டாண்மை நிறுவனத்தின் பங்குதாரர்களுக்குள் மாற்றம் நடந்துள்ளது என்றால் ஆய்வாளர் கேட்ட 1990 சமயத்தில் யார் பங்குதாரர்களாக இருந்தார்களோ அவர்களுடைய விவரத்தை ஆய்வாளர் விசாரித்தபோது சொல்லியுள்ளேன்.

3. ஒவ்வொரு சமயத்திலும் பங்குதாரர்களுக்குள் ஏற்படும் மாற்றங்கள் குறித்து எங்களது அலுவலகத்தில் பதிவு செய்யப்படும் என்றால் அது குறித்த விவரங்களை எங்களிடம் முறையாக தாக்கல் செய்யும் சமயத்தில் அவை பதிவு செய்யப்படும். 1995-ற்கு பிறகு இந்த கூட்டாண்மை நிறுவனத்தின் பங்குதாரர்கள் C.A. குரியன் மற்றும் சாந்தா குரியன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை:** இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.